38 காலணா Regd. No. M. 2811.


சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே'

வாரம் மும்முறை வெளிவரும் ACC-NO-10813 ஆசிரியர்:
வருட சந்தா 4½ ரூபா சங்கு. ஸுப்ரஹ்மணியன்

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 27-4-33

நாடோடி அய்யங்கார்



மேற்கே ஆசைகாட்டி அழைக்கும் கையை நம்பி சென்னையினின்று ஓர் அய்யங்கார் யாத்திரை புறப்பட்டு விட்டார். சிறையிலும், வெளியிலும் உள்ள தேசபக்தர்களின் கோரிக்கை என்ன வென்பதை அவர் மறந்து விட்டார் போலும்! இவரது யாத்திரையை ஒரு உண்மை இந்தியனாவது ஆதரிக்கின்றனா?

காசியில் காங்கிரஸ் தலைவர்கள்

'ராஜீயம்' என்பது சாமர்த்தியமான சதுரங்க ஆட்டம். ஒரு காய் தவறாக நகர்த்தப்பட்டு விட்டாலும் ஆட்டமே தோல்வியுற்றுப் போகலாம். சமயா சமயங்களில் சும்மா இருந்து விட்டாலும் விஷயம் கெட்டுப் போகலாம். ஆகவே ராஜீய வாதிகள் எப்போதும் எச்சரிக்கையோடு நடக்க வேண்டு மென்பது இதனால் ஏற்படுகிறது.

அடுத்த 30ம் தேதி யன்று காசிக்கு வந்து தம்மோடு கலந்து பேச வேண்டுமென சில காங்கிரஸ் தலைவர்களை தற்காலக் காங்கிரஸ் அக்கிராஸனாதிபதியான ஸ்ரீயுத ஆனே அழைத்திருக்கிறார். அவ்வாறு ஆலோசிக்க தற்காலிகக் காங்கிரஸ் தலைவருக்கு உரிமையுண்டு. ஆனால் காங்கிரசுக்குப் புதிய திட்டங்கள் போடலாமா, கூடாதா வென்பது பற்றி வெளியே யுள்ள காங்கிரஸ் வாதிகளுக்குள் அபிப்பிராய பேதம் பலமாய் இருந்து வருகிறது. ஆகவே ஸ்ரீயுத ஆனே பல திறப்பட்ட அபிப்பிராய முடையவர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டு மென்பது ஏற்படுகிறது.

தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டில் முக்கியமான சில தலைவர்களுக்கு அழைப்பு வரவில்லை என்று கேள்விப் படுகின்றோம். காங்கிரஸின் உயிர் நாடிகள் போன்ற அரும் பெருந் தலைவர்கள் சிறையிலே தான் கிடக்கின்றனர். அவர்கள் அபிப்பிராயங்களோ கிடைப்பதற்கு இடமில்லை. ஆகவே காசியில் கூடும் தலைவர் கூட்டத்தில் வெளியே யுள்ளவர்களின் பிரதிநிதித்வமும் பூரணமாக இல்லாவிடின் ராஜீய ஆட்டம் தவறாகப் போய் விடலாம். ஆகவே காங்கிரஸ் தலைவர் ஸ்ரீயுத ஆனே, இந்தக் காசிக் கூட்டம் சம்பந்தமாக புனராலோசனை செய்வாரெனவும் ஜாக்கிரதையாக நடப்பாரெனவும் நம்புகின்றோம். நிற்க,

அசாத்தனம் அடாவடியாகத் தனது வழியே போய்க் கொண்டிருப்ப தென்னவோ வாஸ்தவம். ஏதோ சில 'குலாம் கூட்டம்' சர்க்காருக்கு அடி பணிந்து சீமை நோக்கி ஓடுவ தென்னவோ வாஸ்தவம். ஆனால் இவைகளால் காங்கிரஸ்காரர்கள் பரபரப்படைய மாட்டார்களென்பதை தலைவர் ஜயராம்தாஸ் தௌலத்ராம் சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். உலகத்தில் நடந்த எந்த விடுதலைப் போரை ஆராய்ந்தாலும் சில சமயங்களில் ஓர் வகை ஒச்சலேற்படுவது சகஜ மென்பது தெரிய வரும். அத்தகைய நிலை நம் நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்று உறுதியாகச் சொல்வதற்கும் இல்லை. ஆகவே காசியில் கூடும் தலைவர்கள் எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டு மென்றும், பல திறப்பட்ட அபிப்பிராய முடையவர்களையும் ஆலோசித்தே எதையும் செய்வார்களென்றும் நம்புகின்றோம்.

மலேயாவில் இந்தியர்கள்

மலேயாவில் மொத்த ஜனத் தொகை 44 லக்ஷமென்றும் அதில் 6¼ லக்ஷம் பேர் இந்தியர்களென்றும் கணக் கெடுத்திருக்கிறார்கள். ரப்பர் தோட்டங்களிலோ, நகரச் சாக்கடைகளிலோ, ரயில்வேக்களிலோ ஊழியம் செய்து நமது சகோதரர்கள் அங்கு வயிறு வளர்த்து வருகின்றனர். வர வர அங்குள்ள இந்திய ஏழைகளை முதலாளி வர்க்கம் படுத்தும் பாடு கேட்டு நமது மனம் கரைகின்றது.

சர்க்கார் சட்டப்படி தொழிற்சாலைகளில் ஒவ்வொரு ஆணுக்கு 50 ஸெண்டுகளும், (அந்த ஊர் நாணயம்) பெண்ணுக்கு 40 ஸெண்டுகளும் கொடுக்க வேண்டு மென்றிருக்கிறது. ஆனால் அங்கு போயுள்ள இந்தியர்களுக்கு வேறு வழியில்லை யென்பதை அறிந்து கொண்ட தோட்ட முதலாளிகள் ஏழைகளின் வயிற்றி லடிக்கவும் துணிந்திருக்கின்றனராம். 30 ஸெண்டு 40 ஸெண்டு என்று சம்பளம் கொடுப்பவர்களுமுண்டாம். வயிற்றுக் கவலையைத் தீர்க்க, நாடு விட்டு நாடு ஓடியும் இந்தியனைப் பிடித்த வறுமைச் சனியன் தொலையாது போயிருக்கிறதே!

மலேயாவில் இந்தியக் கூலிகளின் க்ஷேமத்தைக் கவனிப்பதற்காகவென்று ஓர் அதிகாரியுமிருக்கிறார். அவரும், இந்திய துரைத்தனமும், கஷ்டப்படும் நமது சகோதரர்களின் கவலையைத் தீர்க்க முயலலாகாதா? முதலாளிகளின் திமிரைக் குறைக்கலாகாதா?

தலைவர் ஸென்குப்தா அவர்களின் பார்யையும், சமீபத்தில் கல்கத்தா காங்கிரஸில் தலைமை வகித்தவருமான ஸ்ரீமதி நெல்லி ஸென்குப்தா அவர்களை கல்கத்தா கார்ப்பொரேஷனின் 'ஆல்டர் மேனு'க்குத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

'கான்பூரில்' பகிஷ்கார வாரம் கொண்டாடப் பட்ட போது இரு தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

'போலி'கள் மீது புகார்

(திப்பு எழுதியது)

சென்னைப் போலீஸ் இலாகா கண்டு பிடித்தது சரியோ தப்போ நம்மால் சொல்ல முடியாது. நல்லதா கெட்டதா வென்றும் நமக்குப் புரியவில்லை. பண நோட்டுகளை அச்சடிப்பதற்கும் ஈயத்தால் நாணயங்கள் செய்வதற்கும் ஓர் ஆசாரியார் ஏற்பாடு செய்து கொண்டிருந்தாராம். போலீசார் அவரைப் பிடித்து விட்டார்கள். இப்போது ஊரிலோ பணப் புழக்கம் குறைவா யிருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் உருளட்டுமே யென்று தாராள நோக்கத்தினால் அப்பேர்வழி நாணயங்களை சிருட்டிக்க விரும்பி யிருந்தாரானால் அவர் மீது கோபித்துக் கொள்வதற்கில்லை. சர்க்கார் நாணய அச்சுச் சாலையில் வேலை மிக்க கடுமையா யிருக்கிறதாம். அந்த வேலையைக் கொஞ்சம் குறைக்க வேண்டு மென்ற நல்ல நோக்கத்தோடு தாமும் நாணயம் அச்சிட முயன்றதாக ஆசாரி சொன்னால் அவரிடம் நன்றி காட்ட வேண்டியது தான். ஆனால் போலீசார் அதை யெல்லாம் உணர்ந்தார்களில்லை. 'போலி' நாணயம் போட்டா ரென்று அவரைக் கைது செய்து விட்டனர். இது சரியா? தப்பா?

'தடக் படக் ஸேட்' என்று சென்னையில் ஒருவர். இந்தியாவில் ஏற்பட்ட சுதேசி யியக்கத்தை உபயோகப் படுத்திக் கொண்டவர் அவர் ஒருவர் தான். லங்காஷயரிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் ஏராளமாக அவருக்கு துணிகள் வருகின்றன. அந்தத் துணிகளின் தலையில் சரோஜினி தேவி படத்தையும், காந்திஜி படத்தையும் ஒட்டி 'சுதேசி சுதேசி' என்று சொல்லி அவர் விற்று விடுகின்றார். பாமரர்கள் ஏமாந்து போய்க் கொண்டே யிருக்கின்றனர். இந்த போலி 'சுதேசி'க்காரனை போலீசார் தங்கள் அருட் கண்களால் ஏன் பார்க்கவில்லை?

கோயம்புத்தூரில் ஒரு மில் இருக்கின்றது. அந்த ஆலையில் 'கதர்த் துணி' உற்பத்தியாகின்றதாம். அடாசு பஞ்சைப் போட்டு, சிறு கயிறுகளாகத் திரித்துத் துணியாக்கி அதைக் 'கதர்' என்று சந்தைக்கு அனுப்பி விடுகிறார்கள். கையால் நூற்று, கையால் நெசவு செய்து சர்க்கா சங்கத்தால் அத்தாட்சி பெற்ற துணிக்குத் தான் 'கதர்' என்ற பெயர் தகும். ஆலையில் நூற்று, ஆலையில் நெய்து வெளியே வரும் துணிக்கு "இரண்டாம் தினிஸுக் கதர்" என்று சில விடங்களில் பெயர் தரப்பட்டிருக்கிறது. மிகவும் தாராள நோக்கமுடைய சில வியாபாரிகள் எல்லாவற்றையும் 'சுத்தக் கதர்' என்று தாராளமாகப் பெயர் கொடுத்து விடுவதுண்டு. பிறகு தாராளமாக விலை வைத்து விற்றுக் கொண்டிருக்கின்றனர். இப்படி போலிக் கதர் விற்பவர்களைப் போலீசார் ஏன் கடைக் கண்ணால் பார்க்கக் கூடாது என்று ஒருவர் கேட்கின்றார்.

உதவாக்கரைப் பருத்திக்கு ஓர் உருவம் தந்து அதையும் விற்பனை செய்யச் சக்தி பெற்றுள்ள மில்லுக்காரர்களை நாம் போற்ற வேண்டுமென்று இன்னொருவர் சொல்கின்றார். ஆனால் போலி நாணயத்தின்மீது போலீசாருக்கு எப்படி ஆத்திரம் வந்ததோ அந்த மாதிரி போலிச் சுதேசி விற்பவன் மேலும், போலிக் கதர் பண்ணுகிறவன் மேலும் ஆத்திரம் ஏற்படாதிருப்பானேன் என்று வேறொருவர் கேட்கின்றார்.

ஆனால் சர்க்காருக்கு 'போலி', 'இமிடேஷன்' முதலிய விஷயங்களில் அதிகக் கவலை யில்லை போலிருக்கிறது. ஏனெனில் இந்தியாவின் பிரதிநிதிகளென்று சிலரைப் பொறுக்கி சீமைக்கு அனுப்புகின்றார்களே அவர்களெல்லாம் 'போலி'களன்றோ! ஆனால் அவர்களை 'இந்தியப் பிரதி நிதிகள்' என்று துரைத்தனத்தாரே பெயர் கொடுக்கின்றார்களன்றோ!

உதாரணமாக ரங்கஸ்வாமி அய்யங்காரைத் திட்டாத பத்திரிகை கிடையாது. ஸாப்ருவையும் ஜயக்கரையும் கேலி செய்யாதவர்கள் இல்லை. இந்தியாவைப் பற்றி ஏதுமறியாத ஆகாகான் சீமைக் கமிட்டியில் 'இந்தியாவின் பிரதிநிதி'யாக உட்காரப் போகிறாராம். எல்லாம் 'போலி'கள். ஆனால் சர்க்காருக்கு இந்தப் போலிகளின் உதவி வேண்டி யிருக்கிறது. மேலும் "இந்தியர்களைக் கலந்து தான் இந்திய அரசியலை நிர்ணயித்தோம்!" என்று உலகில் தம்பட்ட மடிப்பதற்கே இந்தச் சூழ்ச்சி போதும்!

'போலி' நெய் விற்பவர்களைச் சென்னைக் கார்ப்போரேஷன் கண்டு பிடித்துத் தண்டித்துக் கொண்டிருக்கிறது. 'போலி' நாணயம் போடுபவர்களை போலீசார் கண்டு பிடித்துத் தண்டித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தியாவின் போலி பிரதிநிதிகளுக்கு மட்டும் போக வர கப்பல் சார்ஜ் எல்லாம் தந்து சர்க்கார் ஆதரிக்கிறது. என்ன அநியாயம்! சர்க்கார் இந்தப் போலிகளுக்கு ஆதரவு தரலாமா?

வெண்ணை வெட்டி சிப்பாய்

“ஒரு கோடாலி கொண்டு வந்து கொடு. எல்லாத்தையும் உரி உரி யென்று உரித்து விடுகிறேன் பார்” என்றானாம் ஒரு சிப்பாய்.

“எதை யடா உரிக்கப் போகிறாய்?” என்று கேட்டான் எதிராளி.

“வாழைப் பழத்தை!” என்றானாம் சிப்பாய். அந்தச் சிப்பாயைப் பார்த்து எதிராளி சிரித்து, “என்னிடம் ஒரு கத்தி கொடு! வெட்டு வெட்டென்று வீசி விடுகின்றேன்” என்றானாம்.

“எதை வெட்டுவாய்” என்று கேட்டான் சிப்பாய்.

“வெண்ணையை” என்றானாம் எதிராளி.

“ஐயா தாங்கள் மகாவீரன். வெண்ணை வெட்டிச் சிப்பாய் யென்ற பெயர்தான் உங்களுக்கு சரி” என்றான் முதற் சிப்பாய்.

வாழைப் பழம் உரிக்கும் சிப்பாயும், வெண்ணை வெட்டி சிப்பாயும் போர்க்களத்துக்குப் போனது போல ஸர் அப்துர்ரகிமும் ஸர் பிரோஸ்ஷா சேத்னாவும் இப்போது சீமைக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர். கப்பலில் ஏறும்போது அப்துர் ரகிம்,

“போகும் காரியத்தில் ஜெயித்து வந்தால் காங்கிரஸ்காரர்களும் வழிக்கு வருவார்கள். இல்லாவிடில் காங்கிரஸ்காரர்களல்லாதவர் கூடச் சேர்ந்து சர்க்காரைத் தாக்குவார்கள்.” என்று கூறினாராம். ஏது அப்துர் ரகிமுக்கு ஜோஸ்யம் கூடத் தெரியும் போலும்! அப்போது அவரோடு கப்பலில் ஏறிய ஸர் ஸேத்னா சொன்னதாவது:—

“இங்கிலாந்தில் இந்திர ஜாலம் நடந்துவிடப் போவதில்லை. ஆனால் அங்கு அரசியல் யுத்தம் போடுவதற்காக நாங்கள் போகிறோம். ஒவ்வொரு அங்குலத்தையும் விடாமல் நாங்கள் சண்டை போட்டே தீருவோம்.”

கூட்டுக் கமிட்டியில் வாய்ச் சண்டை போடுவதற்குக் கூட இந்தியப் பிரதிநிதிகளுக்கு ஆங்கிலேயர் இடங் கொடுக்கப் போவதில்லை. வெறுமனே சாக்ஷிகளாகக் கூண்டிலேற்றி விசாரிக்கப் போகின்றனர். இதை ஓர் யுத்தமாக எண்ணிக் கொண்டிருக்கும் சேத்னாவை வெண்ணை வெட்டி சிப்பாயென்றே கூற வேண்டும்.

தண்ணீர் சண்டைக்கு 144

சில ஊர்களில் குடி-தண்ணீர்க் குழாயருகே ஏராளமான தண்ணீர்க் குடங்கள் வைக்கப்பட்டிருக்கும். வரிசை தப்பி வேறு எவளாவது குழாயில் தண்ணீர் பிடித்து விட்டாளானால் அவ்வளவுதான்! குழாய்ச் சண்டை தொடங்கிவிடும். வாயினால் வழங்க வொண்ணாத வசவுகள்! மேலத் தெருக்காரிக்கு ஒரு கக்ஷி ஆதரவு; கிழத் தெருக்காரிக்கு இன்னொரு கக்ஷி! இவ்வாறாக வாய்ச் சண்டை முற்றி பானைகளை உடைத்துக் கொண்டு அபலைகள் சண்டை யிடும் காக்ஷி வீரமாயிருக்கும்.

அதே மாதிரி தண்ணீர்ச் சண்டைகளுக்கு ஹிந்து மதத்தைச் சேர்ந்த குருமார்களும் கச்சை கட்டி யிருக்கின்றனர். ஸ்ரீ வைகுண்டம் என்ற ஊரில் வைகுண்ட நாத ஸ்வாமிக்கு ஐந்தாம் திருவிழா வந்தது. ஆழ்வார்திருநகரி என்ற ஊரினின்று நம்மாழ்வார் விக்ரகம் ஸ்ரீ வைகுண்ட கருடசேவைக்குப் போவது வழக்கம். அன்று நாங்குநேரி என்ற ஊரினின்று “வானமாமலை ஜீயர்’ என்ற வைஷ்ணவ குரு அழைக்கப் பட்டிருந்தார். ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த ‘எம்பெருமானார் ஜீயர்’ என்ற மத குரு, நேரே மாஜிஸ்திரேட்டிடம் போய் 144 பிரிவை அருளவேண்டுமென்றும், வானமாமலையார் முதல் தீர்த்தம் பெறாது தடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டாராம். மாஜிஸ்திரேட் 144 போட்டு விட்டார். பிறகு எம்பெருமானார் ஜீயரும் ஊர்வலத்துக்கு வந்தார். 144 ரகஸ்யம் வெளிப் பட்டதும் வானமாமலை ஜீயர் கோஷ்டி மாஜிஸ்திரேட்டிடம் ஓடிற்று. ‘எம்பெருமானா’ருக்கு தீர்த்த அதிகாரம் இல்லையென்றும், தங்கட்கே உண்டென்றும் வாதித்தனர். மாஜிஸ்திரேட் பழைய 144ஐ வாபீஸ் வாங்கி இன்னொரு 144ஐ எம்பெருமானார்மீது போட்டாராம். இந்த மாதிரி கலாட்டா ராத்திரி 11 மணி வரை நடக்கவே ஸ்வாமி புறப்பாடு தடைபட்டுப் போயிற்றாம்.

இப்படியா மத குருக்கள் தண்ணீர்ச் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும்! பிரிட்டிஷ் சர்க்காரைச் சேர்ந்த ஒரு மாஜிஸ்திரேட்டிடமா போய் இவர்கள் தஞ்சமடைய வேண்டும்! அப்படி தண்ணீர் தாகமாயிருந்தால் இரண்டு ஜீயர்களுமாக பெரிய குளத்திற்கு போய் வேண மட்டும் தண்ணீர் குடிக்கலாமல்லவா? நிற்க, ஸ்வாமி புறப்பாட்டை தாமதப்படுத்திய பாவம் எந்த ஜியரைச் சேர்ந்தது?

நாளை 30ம் தேதி ஹரிஜன தினம். மறவாதீர்!

மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதுவதாவது :—

நாளை 30ம் தேதி ஹரிஜன தினத்தைக் கொண்டாடுபவர்கள் ஒழுங்காக அத் தினத்தைக் கொண்டாடுவார்களென நம்புகிறேன். ஒன்றும் விசேஷமாகச் செய்ய முடியாவிடினும் ஹரிஜன சேவைக்காக ஆங்காங்கு பணம் வசூலிக்கலா மல்லவா? உண்டி வசூல் செய்பவர்கள் 'பல துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழியை ஞாபகத்தி லிருத்திக் கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் ஒரிஸ்ஸாவில் நான் உண்டி வசூல் செய்தேன். தம்பிடிகளாகவே வசூல் செய்தேன். அநேக கோடி மக்களடங்கிய நம் நாட்டில் ஆளுக்கொரு தம்பிடி போட்டாலும் ஏராளமாக ஆகிவிடு மன்றோ. யாரோ சில கோடீச்வரர்களிடத்தில் வாங்கும் பெருந் தொகைகளை விட பல்லாயிரக் கணக்கான பொது ஜனங்களிட மிருந்து வீடு வீடாகச் சென்று சேர்க்கும் செப்புக் காசுகள் மிகவும் சிலாக்கியமானவை. ஹரிஜன முன்னேற்றத்துக்காக பணம் வசூலிக்கப் படுவதால் எல்லோரும் அந்த வசூலுக்கு உதவுவார்களென நம்புகிறேன். யாராவது பணம் கொடுக்கா விட்டால் அவர்களோடு எவரும் வாக்கு வாதம் செய்யலாகாது. கோபங் கொள்ளவும் கூடாது.

டாக்டர் தொழில் செய்பவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஏழை ஹரி ஜனங்களிடம் சென்று அவர்களுடைய வியாதிகளைப் போக்க டாக்டர்கள் முற்பட வேண்டும். சுகாதார விதிகளைப் பற்றி அவர்களுக்கு சொல்லித் தர வேண்டும். இதனால் டாக்டருக்கு வரும்படி இல்லை யென்பது நிச்சயம். ஆயினும் ஆங்காங்குள்ள டாக்டர்கள் ஒன்று சேர்ந்து இந்தத் தர்ம வேலையைப் பகிர்ந்து கொள்வார்களானால் யாருக்கும் சிரமம் தெரியாது.

* * *

ஹரி ஜனங்கள் எச்சில் இலையை எடுத்துச் சாப்பிடுவது சுத்த தப்பு. அவ் விஷயத்தில் ஹரி ஜனங்களைச் சீர்திருத்தும் பொறுப்பு நமது பெண்களிடம் இருக்கிறது. இந்த விஷயத்தில் ஸ்திரீகள் பெரிய மனது காட்டுவார்களானால், ஸனாதனிக ளனைவரும் சிரத்தை காட்டுவார்களானால், இந்தத் தீய வழக்கத்தை சீக்கிரத்தில் ஹரி ஜனங்களிடமிருந்து போக்கி விடலாம். மனித ஜன்மமாகப் பிறந்த ஹரி ஜனனும் நமது சகோதரன் என்ற எண்ணம் ஏற்பட்டதானால் இந்த எச்சில் இலையைத் தின்னுமாறு நம் சகோதரனை நாம் விடுவோமா?

* * *

தமிழ் நாட்டில், 'நாட்டார்' வகுப்பினரின் நிரந்தர அடிமைகள் போல 'ஹரிஜனங்'கள் நடத்தப் படுகின்றனராம். இந்த இரண்டு ஜாதியினருக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டதுண்டாம். ஒரு தடவை ஹரிஜனச் சேரியை நாட்டார்கள் கொள்ளை யடித்தார்களாம். சேரிப் பள்ளிக்கூடத்தை எரித்தார்களாம். இதன் பயனாக அநேக ஹரிஜனங்கள் ஹிந்து சமயத்திடம் வெறுப்படைந்து வேறு மதத்தில் சேர்ந்தனராம். ஹரி ஜனங்கள் 'ஷர்ட்' போடலாகா தென்றும், மேல் துணி போடலாகாதென்றும், பள்ளிக் கூடங்களில் போனால் தனியாக உட்கார வேண்டுமென்றும் பலவந்தமாகக் கட்டுப் பாடுகள் செய்ய 'நாட்டார்கள்' முயல்கின்றார்களாம்.

இந்த சம்பவம் இனி தொடர்ந்து நடக்கலாகாது. ஹரிஜன மாப்பிள்ளைகள், பல்லக்கில் கல்யாண ஊர்வலம் போவதை ஏன் தடுக்க வேண்டும்? இந்த மாதிரி மேல் ஜாதியினர் அதிக்ரமக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதை ஸனாதனிகள் உள்பட அனைவரும் சேர்ந்து தடுக்க வேண்டும். இனி தமிழ் நாட்டில் இரு ஜாதியினருக்கும் சமாதானம் ஏற்படுமாக.

* * *

மாதவிடாய் மூன்று நாட்களிலும் நமது வீட்டு ஸ்திரீகள் தீண்டாதவர்கள் தானே என்று ஒருவர் கேட்கின்றார். ஆனால் இந்தத் தீண்டாமைக்கும் 4 கோடி இந்தியர்களை நாம் நடத்தும் தீண்டாமைக்கும் சம்பந்தமே கிடையாது. தேகத்தில் ஏற்படும் ஒரு கோளாறுக்காக ஒதுக்கி வைக்கும் தீண்டாமைக்கும், பிறவியினின்றே கோடிக் கணக்கானவர்களை விலக்கி வைக்கும் தீண்டாமைக்கும் வித்யாசமில்லையா? மாதவிடாய்த் தீண்டாமை சரீர சாஸ்திரத்தைக் காரணமாகக் கொண்டுள்ளது. ஆனால் மனித வர்க்கத்தில் சிலரை ஒதுக்கி வைப்பது சுயநலத்தின் கற்பனையினால் ஏற்படுத்தப்பட்டு மூட நம்பிக்கையால் வளர்க்கப்பட்டு வருவது! இந்தத் 'தீண்டாமை' இன்னும் நம் நாட்டில் இருக்கலாமா?

ஹரிஜனப் பணி செய்வோருக்கு

(மகாத்மா காந்தி)

ஹரிஜன சேவை செய்யும் தொண்டர்களுக்கு சிரார்த்தம், உபாயனம், முதலியன செய்து வைக்க புரோகிதர்கள் சிற்சில இடங்களில் முன் வருவதில்லையாம். இந்த நெருக்கடியான சந்தர்ப்பங்களில் என் செய்வது என்று தொண்டர்கள் கேட்கின்றனர்.

ஒரு புரோகிதரும் கிடைக்கா விட்டால் கர்மங்களைத் தாங்களே செய்ய அந்தத் தொண்டர்கள் முற்படவேண்டும். கல்யாணமோ, பிறப்போ, சாவோ எந்த கிருத்தியமாயினும் அதைப் புனிதமாக்க பகவானுடைய பெயரை விட வேறெதற்கும் சக்தியில்லை. அவருடைய புனித நாமங்களையும், பக்தர்களின் நாமங்களையும் உச்சரிப்பதால் நமது மடமை ஒழியும். எலெக்டரிக் சக்தி போல நமது வாழ்வில் அது வேலை செய்யும். புரோகிதர்கள் இந்த ஒரு காரணத்துக்காக ஹிந்து குடும்பங்களை விட்டு விடுவது தப்பிதமென்பதை ஞாபகப் படுத்துகின்றேன். நமது மதத்தைப் புனருத்தாரணம் செய்வதற்காக நல்லெண்ணத்தோடு முற்பட்டுள்ளவர்களை திரஸ்காரம் செய்யலாமா?

நான் பூணூலை மறந்தவன் தான். ஆயினும் உபாயன சம்ஸ்காரத்தில் ஏராளமான உள்ளர்த்தங்கள் உண்டு என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உபாயன காலத்தில் இரண்டாவது பிறப்பு மனிதனுக்கு ஏற்படுகிறதென்கிறார்கள். கேவலம் சதை வாழ்க்கையில் உள்ள மனித ஜன்மா, கடவுளுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற விரதத்தை ஏற்றுக் கொள்வது ஒரு புனிதச் செய்கை யல்லவா? அந்த உபநயனம் பெற்றவர்கள் அன்று முதல் மனித சமூகத்தின் ஊழியர்களாகத் தங்களை எண்ணிக் கொள்ள வேண்டுமென்பது ஏற்படுகிறது.

—"ஹரிஜனம்."

இந்தியாவின் தோல் வர்த்தகம்

1931-32-ம் வருஷத்தில் இந்தியாவில் எவ்வளவு தோல் சாமான்கள் இறக்குமதியா யிருக்கிறதென்றும் எவ்வளவு ரூபாய் பொறுமானமுடைய சாமான்கள் ஏற்றுமதியா யிருக்கிறதென்றும் முழுக் கணக்கும் கிடைத்துளது.

இறக்குமதிகள்

	ரூபாய்கள்
பெல்டுகள்	25,95,000
பூட்ஸுகள்	11,06,000
பெட்டிகள்	95,000
ரோலர் சாமான்	7,12,000
சேணம் முதலியன	64,000
சில்லரைத் தோல் சரக்குகள்	6,84,000
பதனிட்ட மிருக உருவங்களும், தோல்களும்	7,97,000
மொத்தம் தோல் சாமான்கள் இறக்குமதி	84,48,000

ஆனால் இந்த 84 லக்ஷம் ரூபாயையும் இந்தியா விட்டுப் போகாதவாறு செய்ய முடியும். இத்தனை சாமானும் செய்வதற்கு வேண்டிய சாதாத் தோலை இந்தியா ஏற்றுமதி செய்கிறதென்னவோ வாஸ்தவம். எவ்வளவு பொறுமானமுள்ள தோல் 1931-32ல் ஏற்றுமதி செய்தோம் தெரியுமா?

ஏற்றுமதிகள்	1931-32ல்
குளம்பு முதலியன	ரூ. 2,12,65,000
வெறுந் தோல்கள்	ரூ. 3,13,69,000
பதனிடாதவை	ரூ. 523,000
சில்லரை ரகங்கள்	ரூ. 51,000
ஏற்றுமதி செய்யப்படும் தோல் சரக்குகள்	ரூ. 3,12,000
ஆகமொத்தம் 1931-32-ல் இந்தியா ஏற்றுமதி செய்திருக்கும் தோல் ரகங்களின் பொறுமானம்	ரூ. 535,20,000

53 லக்ஷ ரூபாய்க்கு தோல் ஏற்றுமதி செய்கிறோம். 84 லக்ஷ ரூபாய்க்கு தோல் சாமான் இறக்குமதி செய்கிறோம்.

இப்படியாக எத்தனை நாளைக்கு இந்தியா நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும். இந்தியர்களே! நீங்கள் தோல் சாமான்களை வாங்கும் போது இந்தியாவில் செய்ததாகப் பார்த்து வாங்கலாகாதா?

நமது சல்லடையில்

டெல்லியும் சென்னையும்

டெல்லி முனிஸிபாலிட்டிக்குச் சொந்தமாக சில கடைகள் இருக்கின்றன. "அக்கடைகளைச் சுதேசி சாமான் விற்பனை செய்பவர்களுக்கே கொடுக்க வேண்டும்" என்று ஒரு பிரதிநிதி பிரேரித்தார். தீர்மானம் தனிக் கமிட்டிக்குப் போயிருக்கிறதாம். சென்னையில் சைனபஜாரில் கார்ப்போரேஷனுக்குச் சொந்தமாக ஒரு 'மார்க்கெட்' திறக்கப்பட்டது. கடைகளை சுதேசி விற்கும் வர்த்தகர்களுக்கு மட்டும் கொடுப்பதா இல்லையா யென்பது பற்றி சென்னைக் கார்ப்போரேஷனுக்கு ஓர் வித எண்ணமும் ஏற்படவில்லை. ஏனெனில் மேற்படி 'பழ மார்க்கட்'டில் போய்ப் பார்த்தால் அந்நியத் துணிக் கடைகளும், ஆஸ்திரேலியன் பழக் கடைகளும் இருப்பதைக் காண்கின்றோம். சென்னை மாகாணத்தைப் பிற மாகாணத்தான் ஏன் கேலி செய்ய மாட்டான்?

கூட்டத்தைக் கலைக்க

டோராகாவிகான் என்ற ஊரில் வெள்ளைக் கடுதாசியைப் பற்றிக் கண்டிக்க பொதுக் கூட்டம் ஒன்று நடந்ததாம். அக் கூட்டத்தைக் கலைப்பதற் கென்று வந்தவர்கள் அழுகு முட்டைகளை யெடுத்து அடித்தார்கள். பிறகு நடன மாதர் சிலரைக் கொணர்ந்து பொதுக் கூட்டத்துக் கருகில் நர்த்தனம் செய்ய விட்டார்களாம். 'வெள்ளைக் கடுதாசி' என்ற மோஹினியின் நர்த்தனத்தை ஆராய்வதை விட உலகத்து நடன மாதரின் நர்த்தனத்தைக் கண்ணால் காண்பது மேலென்பது அங்கிருந்தவர்களின் அபிப்பிராயம் போலும்?

இராணுவத்தில் நிற பேதம்

இந்திய இராணுவத்தில் ரிஸர்வ் ஆபீஸர்கள் என்று கொழுத்த சம்பளம் வாங்கும் கூட்டம் ஒன்றுண்டு. அவ்வாறு 1206 ஆபீஸர்களிருக்கின்றனர். அதில் 793 பேர் ஐரோப்பியர்கள்; 413 பேர்தான் இந்தியர்கள். இராணுவத்தில் இன்னொரு வகையான 'ரிஸர்வ்' ஆபீஸர்கள் ஜாப்தாவில் 286 பேர்களுண்டு. அக் கூட்டத்தில் ஒருவர்தான் இந்தியராம். இந்தக் கணக்கை சேனாதிபதி அவர்களே மூத்தண்ணு சபையில் தந்தார். ஆனால் அதே சேனாதிபதி வேறோரிடத்தில் பேசும் போது, "ரிஸர்வ் சர்விஸுகள் அத்தனையும் இந்தியர் கையிலிருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்" என்று கூறினார். இந்தத் துரைமார்கள் பேசும் போது தித்திக்குது! ஆனால் அவர்கள் செய்கையோ முழுதும் கசக்குது! என் செய்வோம்?

ஆங்கிலேயர் தேச பக்தி

ருஷியாவில் விசாரிக்கப்பட்டு நாடு கடத்தப் பட்ட பிரிட்டிஷார் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தனர். லண்டன் ஸ்டேஷனில் அவர்களுக்கு வரவேற்பு நடந்ததாம். தேசிய கீதம் பாடினார்களாம். ஆண்களும், பெண்களும் அநேகர் நின்று மாலை போட்டார்களாம். தங்கள் ஜாதிக்காரன் ஒருவனைப் பிற அரசாங்கம் விசாரிப்பதென்றாலோ, தண்டிப்பதென்றாலோ பிரிட்டிஷாருக்கு அவர்கள் விஷயத்தில் பரம அக்கரை ஏற்படுகின்றது. சமீபத்தில் சைகோனிலிருந்து சில செட்டிமார்களை பிரஞ்சு அரசாங்கம் துரத்தி விட்டது. அவர்கள் வந்த தினத்தில் எத்தனை இந்தியர்கள் அவர்களை வரவேற்றார்கள்? தேசிய கீதம் பாடினார்களா? ஆங்கிலேய ஜாதியினரிடம் நாம் காணும் ஸ்வபாவம் ஒன்றுண்டு. அதாவது வேறெந்த விஷயங்களில் எப்படி இருந்தாலும் 'தங்கள் தேசத்தான்' என்ற உணர்ச்சி மட்டும் ஆங்கிலேயருக்கு அதிகம் உண்டு என்பதில் ஐயமில்லை.

கவர்னர் நாடகம்

ஐக்கிய மாகாண கவர்னர் உத்யோகம் இப்போது சத்திரி நவாப் என்ற இந்தியருக்குக் கொஞ்ச காலத்திற்குக் கிடைத்துள்ளது. அவருக்கு அலகாபாத் முனிஸிபாலிட்டி வரவேற்புப் பத்திரம் அளித்தபோது கவர்னர் பதில் சொன்னார். "நானும் பாரதத் தாயின் ஒரு புத்திரன். ஆகவே நிர்வாகத்தை நடத்த எனக்கு உதவுங்கள்." என்று அவரது பிரசங்கத்தில் கூறினார். வாஸ்தவமாகவே தேச பக்தி ததும்பி இந்தக் கவர்னர் பேசினாரா? அல்லது இது ஒரு நாடக வார்த்தையா? ஒரு மாகாண நிர்வாகம் வெள்ளைக்கார கவர்னரிடம் இல்லாமல் இந்தியக் கவர்னரிடம் இருக்கும் காரணத்துக்காக அந்த நிர்வாகத்தோடு இதர பாரத மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பது அவசியமா? அந்த இந்தியக் கவர்னரும் இதர நிர்வாகிகளைப் போல தவறிழைக்கக் கூடியவரே. இந்த நாட்டு மக்களுள் ஒருவர் என்பது ஒரு 'சிபார்சு' ஆகி விடாது. வாஸ்தவமான தேச பக்திக்குத் தான் மதிப்பு உண்டு. சத்திரி நவாபுக்கு அந்த தேச பக்தி உண்டா? —ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

படுத்தது ஸினிமாத் தொழில்

இந்திய ஸினிமாக் கம்பெனிகள் ஒவ்வொன்றாக அழிந்து கொண்டே வருகின்றன. போன வருடத்திற்கு முன்னே 675 கொட்டகைகளுள் 350 இந்தியப் படங்கள் காட்டப்பட்டு வந்தனவாம். இப்போது 675 கொட்டகைகளில் 70 கொட்டகைகளில் தான் இந்தியப் படங்கள் காண்பிக்கப் படுகின்றனவாம். மூன்றாம் வருடத்தில் 20 லக்ஷம் அடி ஸினிமாப் படத்தை இந்தியக் கம்பெனிகள் தயாரித்தன. போன வருடத்திலோ 14 லக்ஷம் அடி ஸினிமாப் படம் தான் தயாரிக்கப்பட்டது. இந்திய நடத்தும் தொழில் இப்படி ஆதரிப்பாரற்றுப் போக வேண்டுமா?

திருச்செங்கோட்டில்

“தமிழ் மாகாணத்தில் திருச்செங்கோடு ஆசிரமத்தில் ஹரி ஜனங்கள் சக்கிலியத் தொழில் செய்ய வசதி தரப்பட்டிருப்பதாக அறிகிறோம். செத்த மாட்டிலிருந்து தான் தோல் எடுக்கப் பட வேண்டும். மாட்டிறைச்சியை ஹரிஜனங்கள் சாப்பிடுவதற்கும் விடலாகாது. தோலுக்காகவும் குளம்புக்காகவு மென்று மாடடிக்கும் வழக்கமும் கூடாது. தானாகவே, செத்துப் போன மாடுகளைப் புதைத்து தோல்களை வீணாக்குவதை விட அந்தத் தோல்களை உபயோகிக்க ஹரி ஜனங்கள் முற்பட வேண்டும். உலகத்திற்கு தோல் அவ்சியமானது. மேலும் ஹரி ஜனங்கள் மாட்டிறைச்சி சாப்பிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மேல் ஜாதி ஹிந்துக்களின் கடமை யென்பதையும் ஞாபகப் படுத்துகிறோம்—” —“ஹரி ஜனம்”

குண்டேர் ஜில்லா போர்டாரால் நடத்தப்பட்டு வரும் பள்ளிக்கூடங்களில், ஹரிஜன மாணாக்கர்களுக்கு, பள்ளிக்கூட சம்பள மில்லாமல் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

மதுரைக்கடுத்த ஆர்சம்பட்டி கிராமத்தில் இரண்டு விநாயகர் கோவில்கள் ஹரிஜனங்கட்குத் திறக்கப்பட்டன.

செய்தித் திரட்டு

கள்ளிக் கோட்டையில் உள்ள நடுவானூர் கிராம அதிகாரியான ஸ்ரீஜத் பரமேஸ்வரன் மூஸத் என்பவர், தொண்டர்களுக்கு உணவளித்து, தங்குவதற்கும் வசதிகள் செய்து கொடுத்ததற்காக ஆறு மாதம் தண்டனை யடைந்தார். கேரள மாகாண காங்கிரஸ் காரியதரிசியான ஸ்ரீயுத நம்பியார் என்பவருக்கு 20 மாதம் கடுங்காவல் தண்டனை.

லக்ஷ்மணபுரியில் மறுபடியும் அன்னியத் துணி மறியல் ஆரம்பமாகி விட்டது. போலீஸார் மூன்று தொண்டர்களை கைது செய்து கொண்டு சென்றார்கள்.

பம்பாயில் அட்வகேட் ஆப் இந்தியா அச்சுக்கூடத்தினர் 3000 ரூபா ஜாமீன் கேட்கப் பட்டிருக்கின்றனர்.

பம்பாயில் பெஷாவார் தினத்தை கொண்டாடியதற்காக ஆறு தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கல்கத்தாவில் பன்னிரு சிக்கியக் காங்கிரஸ் வாதிகளுக்கு தலா 16 நாள் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

உத்கலின் பிரபல காங்கிரஸ் தலைவரான ஸ்ரீஜத் கோபாபந்து சௌத்ரி என்பாருக்கு ஒரு வருஷக் கடுங்காவலும், உத்கல் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியான அந்தர்யாமி பாண்டா என்பவருக்கு 10 மாத கடுங்காவலும்.

தங்கக் கட்டிகளாகவும், சவரன்களாகவும், 75,71,402 ரூபாய் பொறுமானத்திற்கு ‘வைசிராய் ஆப் இந்தியா,’ என்ற கப்பலில் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது. இங்கிலாந்து தங்க மதிப்பை இழந்த தினத்திலிருந்து இன்று வரையில் பம்பாயிலிருந்து மாத்திரம் 22,47,38,253 ரூபாய்கள் பொறுமான தங்கம் ஏற்றுமதியாகி யிருக்கின்றது.

ராஜமகேந்திரபுரம், பெர்ஹாம்பூர், விசாகப்பட்டணம் ஜெயில்களில் இருந்த லாகூர் சதி வழக்குக் கைதிகள் உண்ணாவிரத மிருந்ததை நிறுத்தி விட்டார்களென ஒரு செய்தி கூறுகின்றது.

ஜாதிப் பகைமை விலக்குச் சங்க மொன்று திருச்சியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.